செ.வெ.எண்.361/2021 நாள்.01.09.2021

## திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் கொரோனா தடுப்பு பணிகள் குறித்து ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

## திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள வணிகங்கள், தொழில் நிறுவனங்கள், கடைகளில் பணிபுரியும் பணியாளர்கள் கொரோனா தடுப்பூசி செலுத்தாமல் பணிபுரிகிறார்களோ அந்த கடைகளுக்கு சீல்வைக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப, அவர்கள் எச்சரிக்கை செய்துள்ளார்கள்.

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் கொரோனா தடுப்பு பணிகள் குறித்து ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்ததாவது:-

திருப்பத்தூர் மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும் உள்ள வணிகங்களில் பணிப்புரியும் பணியாளர்கள் அனைவரும் தங்களின் ஆதார் அட்டைகளை கையில் வைத்திருக்க வேண்டும் என அறிவுறை வழங்கப்பட்டுள்ளது. அப்போது தான் பணியாளர்களின் ஆதார் எண்ணை பரிசோதனை செய்து தடுப்பூசி செலுத்திக்கொண்டார்களா என கண்டறியப்பட்டு தடுப்பூசி செலுத்தாதவர்களுக்கு உனடடியாக அங்கேயே கொரோகா தடுப்பூசி செலுத்தப்படும். நமது மாவட்டத்தில் அரசு மருத்துவமனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், துணை சுகாதார நிலையங்களிலும் உள்ளிட்ட 41 நிரந்தர கொரோனா தடுப்பூசி செலுத்தும் மையங்களில் எப்போதும் தடுப்பூசி செலுத்தும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் 167 நடமாடும் கொரோனா தடுப்பூசி செலுத்தும் குழு அனைத்து பகுதிகளுக்கும் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் ஆம்பூர், வாணியம்பாடி பகுதிகளில் உள்ள வணிகங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களில் பணிப்புரியும் பணியாளர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்த 10 மருத்துவக்குழு பணியமர்த்தப்பட்டுள்ளது.

திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வணிகங்கள், தொழில் நிறுவனங்கள், சிறுக்கடைகளில் பணிப்புரியும் பணியாளர்களின் பாதுகாப்பில் கருத்தில் கொண்டு இச்சிறப்பு கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணிகள் நடைபெறுகிறது. நமது மாவட்டத்தில் எந்தெந்த கடைகளில் பணிபுரியும் பணியாளர்கள் கொரோனா தடுப்பூசி செலுத்தாமல் பணிபுரிகிறார்களோ அந்த கடைகளை சீல்வைக்கப்படும். நமது மாவட்டத்தில் ஒருநாளைக்கு 25

ஆயிரம் நபர்களுக்கு தடுப்பூசி செலுத்து இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த வாய்ப்பை பயன்படுத்தி பொது மக்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொண்டு நலமோடு வாழ வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.என்சிஈ.தங்கையாபாண்டியன், மகளிர் திட்ட அலுவலர் திருமதி.உமாமகேஸ்வரி, துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் மரு.செந்தில், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.விஜயன், துணை ஆட்சியர்கள் திரு.கிருஷ்ணமூர்த்தி, திருமதி.பானுமதி, உதவி இயக்குநர் ஊராட்சிகள் திரு.அருண் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பத்தூர் மாவட்டம்.**